

நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேற்று முன்தினம் (10.07.2023) 1806 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 10 ஆம் நாள் நடைபெற்ற சிப்பாய் புரட்சியில் வீர மரணம் அடைந்த இந்திய வீரர்களுக்கு வேலூர் மாவட்டம் மக்கான் சந்திப்பில் அமைந்துள்ள சிப்பாய் புரட்சி நினைவுத்தூண் அருகே மலர் வளையம் வைத்து நினைவஞ்சலி செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பெ. குமாரவேல் பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி.நந்தகுமார், ப.கார்த்திகேயன், திருமதி அமலு விஜயன், வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், வேலூர் சரக காவல்துறை துணைத் தலைவர் முத்துசாமி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மணிவண்ணன் மற்றும் முன்னாள் படை வீரர்கள் நல அலுவலக உதவி இயக்குநர் லெப்டினல் கர்னல்.க.ஞானசேகர் (ஓய்வு) உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தேசிய விவாதம் ஆகட்டும் ஆளுநர் நீக்கம்!

## “அருஞ்சொல்” இணையதளத்தில் ஆசிரியர் சமஸ் தலையங்கம்!

குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவுக்குத் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் 2023, ஜூலை 8 அன்று எழுதியுள்ள கடிதம் இந்தியாவின் கூட்டாட்சி வரலாற்றில் ஒரு முக்கியமான ஆவணம்.

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவியின் தான்தோன்றித்தனமான செயல்பாடுகளை விவரிக்கும் முதல்வர் ஸ்டாலினுடைய கடிதமானது, ஒரு தனிநபர் அல்லது ஆளுநர் பதவியில் உள்ள ஒருவரின் அத்துமீறல்களைக் குறிப்பிடும் புகாராக அல்லாமல், இந்தியாவில் ஆளுநர் பதவி எத்தகைய அராஜக சாத்தியங்களைக் கொண்டிருக்கிறது என்பதையும், இப்படியான பதவிக்கு ஒரு ஜனநாயக நாட்டில் என்ன தேவை இருக்கிறது என்பதையும் கேட்காமல் கேட்கிறது.

மிகுந்த தர்க்கபூர்வமான மொழியில் எழுதப்பட்டிருக்கிற இந்தக் கடிதம் ஆளுநர் ரவியின் ஆறு அத்துமீறல்களைக் குறிப்பிடுகிறது; கூடவே அது எந்தெந்த வகையில் அரசமைப்புக்கு எதிரானது என்றும் விவரிக்கிறது.

**1. சட்டமன்றம் நிறைவேற்றும் சட்ட முன்வடிவுகளுக்கு அனுமதி அளிப்பதில், தேவையற்ற தாமதம்.**

**2. பொருளாதாரக் குற்றத்தில் ஈடுபட்ட முகாந்திரம் கொண்ட முந்தைய ஆட்சியாளர்கள் மீது வழக்குத் தொடர அனுமதி வழங்குவதில் தேவையற்ற தாமதம்.**

**3. தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசின் அரசியல் மற்றும் கருத்தியலைத் தொடர்ந்து விமர்சிப்பதன் மூலம் அந்த அரசுக்கு எதிரியாகச் செயல்படுதல்.**

**4. குழந்தைத் திருமணக் குற்றத்தில் ஈடுபட்ட சிதம்பரம் தீட்சிதர்கள் குற்றமற்றவர்கள்; அரசு அவர்களைப் பழிவாங்கும் நோக்கில் வழக்கு தொடர்ந்துள்ளது என்று பேட்டி அளித்ததன் மூலம், குற்றவாளிகளை ஆதரித்தல் மற்றும் காவல்துறை விசாரணையில் தலையிடுதல்.**

**5. முதல்வரைப் பொருட்படுத்தாமல், அவருக்குக் கீழேயுள்ள அமைச்சரைத் தன்னிச்சையாக நீக்கியதன் மூலம், அரசமைப்பு மரபுக்குச் சவால் விடுதல்.**

**6. தன்னுடைய பதவிக்குப் பொருத்தமற்ற வகையிலும், மாண்பைக் குலைக்கும் வகையிலும் தொடர்ந்து பொதுவெளியில் பேசுதல்!**

முதல்வர் குறிப்பிடுகிறார், “தன்னுடைய முறையற்ற செயல்பாடுகளால், மக்களால் ஜனநாயகபூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசு மக்களுக்குச் சேவையாற்றுவதை ஆளுநர் தடுக்கிறார். ஆளுநர் ஒரு மேல்முறையீட்டு அதிகாரி இல்லை; ஆனால், அவருடைய செயல்பாடு அப்படித்தான் இருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு சங்கடத்தை உருவாக்குவதோடு, சட்டப்படி நிறுவப்பட்ட அரசாங்கத்தின் மீது அவமதிப்பு, வெறுப்பு, அதிருப்தி மற்றும் தவறான எண்ணத்தை உருவாக்க முற்படுகிறார்; மாநிலத்தின் மற்றும் அரசாங்கத்தின் நெறிமுறைகளைப் பகிரங்கமாகக் கேள்விக்குள்ளாக்குகிறார். அரசமைப்புச் சட்டத்துக்குத் தொடர்ந்து முரணாக நடந்துகொள்கிறார். இப்படி ஒருவர் தொடர்ந்து ஆளுநர் பதவியில் நீடிப்பது நம்முடைய அரசமைப்பின் சிற்பிகளின் உணர்வையோ, மாண்பையோ பிரதிபலிக்கும் வகையில் உள்ளதா என்பதைக் குடியரசுத் தலைவரின் முடிவுக்கே விட்டுவிடுகிறேன்!”

தேதி வாரியாக, ஆதாரபூர்வமாக முதல்வர் ஸ்டாலினால் குறிப்பி டப்பட்டிருக்கும் சம்பவங்களும், அவற்றை ஒட்டி அவர் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளும் அரசமைப்பு நடைமுறை சார்ந்த ஆழமான கேள்விகள். ரவியின் தான்தோன்றி நடவடிக்கைகள் எவ்வளவு ஜனநாயக விரோதமானவை மற்றும் அரசமைப்பு விரோதமானவை என்பதன் தீவிரத்தை நாடு உணர வேண்டும் என்றால், இதே அத்துமீறல்களை ஒருவர் குடியரசுத் தலைவர் பதவியில் இருந்துகொண்டு செய்தால் எப்படி இருக்கும் என்று எண்ணிப் பார்த்தால் விளங்கும்.

நியமனப் பதவியான ஆளுநர் அதிகாரத்தில் அமர்ந்தபடி ஒரு மாநிலத்தின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வரைச் சீண்டுவது மாநில மக்களின் இறையாண்மையைச் சீண்டுவதே ஆகும். மேலும், எந்த அரசமைப்பின் அடிப்படையில் அந்தப் பதவியில் அமர்ந்திருக்கிறாரோ அந்த அரசமைப்பை அவமதிப்பதோடு அல்லாமல், அதன் போதாமைகளையும் நமக்கு ரவி சுட்டுகிறார்.

அரசமைப்புச் சட்டம் என்பது உயிருள்ள பெருவிருட்சம். காலச் சூழல்களுக்கு ஏற்ப அதை வளர்த்தெடுக்கும் கடமை அதன் குடிமக்களுக்கு இருக்கிறது. நம்முடைய அரசமைப்புச் சிற்பிகள் சட்டப் புத்தகத்துக்கு வெளியே உயரிய மாண்புகளோடும் மரபுகளோடும்கூட இந்நாட்டின் அரசமைப்பைப் பிணைத்தார்கள். கௌரவமான பதவிகளுக்கு வருபவர்களுக்கு ஒவ்வொரு நடைமுறையிலும் சட்டப் புத்தகத்தின் மூலம் வழிநடத்துவது அவர்களுடைய கண்ணியத்தைக் கொச்சைப்படுத்துவதாக அமையும் என்று எண்ணினார்கள். இன்று அத்தகைய நம்பிக்கைகள் எல்லாம் பொய்த்துவிட்ட நிலையில், நாம் நம்மையே ஆழ்ந்து பரிசீலித்துக் கொள்ள வேண்டியுள்ளது.

**ஆளுநர் பதவி அரசியல் கருவியாக்கப்பட்டு அரை நூற்றாண்டு காலத்துக்கும் மேலாகிவிட்டது; ரவியின் நடவடிக்கைகள் தனித்த ஒன்றல்ல; டெல்லியின் அராஜக அரசியல் தொடர்ச்சியின் ஒரு கண்ணியே அவர். சரியாக அரை நூற்றாண்டுக்கு முன்னர், 1973 ஜூலையில் இதே நாட்களில், மத்திய - மாநில உறவுகளை மறு ஆய்வுக்குள்ளாக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக அன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு ‘ஆளுநர் பதவியை ஒழிக்க வேண்டும்’ என்று அறைகூவல் விடுத்ததை இங்கே நினைவு கூரலாம். மத்திய - மாநில அரசுகள் இடையிலான ஆக்கபூர்வ உறவுக்கு மட்டும் அல்லாது, கூட்டாட்சியையும் ஜனநாயகத்தையும் பலப்படுத்தும் ஆளுநர் பதவி ஒழிப்புக்கான அறைகூவல் தேசிய அளவிலான கதையாடலாக வளர்த்தெடுக்கப்பட வேண்டிய அவசியத்தையே இன்றைய சூழல் மேலும் தீவிரமாக நமக்கு உணர்த்துகிறது.**

ஆளுநர்கள் அத்துமீறும்போதெல்லாம் நம்முடைய அரசமைப்புச் சட்டத்தில் என்னவெல்லாம் ஆளுநர்களுடைய அதிகாரங்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றன; எவையெல்லாம் சொல்லப்படவில்லை என்று ஆராய்ந்து கொண்டிருப்பதை விடவும், மக்களின் வரிப் பணத்தை நாசமாக்கும் இப்படியான தேவையற்ற ஒரு பதவியை ஒழித்துக் கட்டுவதே இந்தப் பிரச்சினைக்கான தீர்வாக அமையும்!

**நன்றி:**
**“அருஞ்சொல்”**
**இணையதளம்**
**10.7.2023**





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.7.2023) தலைமைச் செயலகத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தின் சார்பில் பதிவு பெற்ற 500 பெண் ஓட்டுநர்களுக்கு புதிய ஆட்டோ ரிக்சா வாங்குவதற்காக தலா 1 இலட்சம் மானியம் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்து, 10 பயனாளிகளுக்கு இத்திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட புதிய ஆட்டோ ரிக்சாக்களுக்கான பதிவு சான்று மற்றும் அனுமதி ஆவணங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், முகமது நசிமுத்தின், முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## 500 பெண் ஓட்டுநர்களுக்கு

# புதிய ஆட்டோ ரிக்சா வாங்க தலா ரூ.1 லட்சம் மானியம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திட்டத்தை தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூலை 12 -

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தின் சார்பில் 500 பெண் ஓட்டுநர்களுக்கு புதிய ஆட்டோ ரிக்சா வாங்குவதற்காக தலா 1 இலட்சம் மானியம் வழங்கும் திட்டம் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.7.2023) தலைமைச் செயலகத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தின் சார்பில் பதிவு பெற்ற 500 பெண் ஓட்டுநர்களுக்கு புதிய ஆட்டோ ரிக்சா வாங்குவதற்காக தலா 1 இலட்சம் மானியம் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்து, 10 பயனாளி களுக்கு இத்திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட புதிய ஆட்டோ ரிக்சாக்களுக்கான பதிவு சான்று மற்றும் அனுமதி ஆவணங்களை வழங்கினார்.

அமைப்புசாரா தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பினை உறுதி செய்திடவும், அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் நல உதவிகள் வழங்கிடவும், தமிழ்நாடு அரசால் 18 அமைப்புசாரா தொழிலாளர்கள் நலவாரியங்கள் அமைக்கப்பட்டு சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன. இவ்வரசு பொறுப்பேற்ற 7.05.2021 முதல் 31.05.2023 வரை, அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் 13,80,695 தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டு, 11,81,905 பயனாளிகளுக்கு 914.27 கோடி ரூபாய் நலத்திட்ட உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தின் சார்பில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு கல்வி, திருமணம் மற்றும் மகப்பேறு உதவித்தொகை, ஓய்வூதியம், கண் கண்ணாடி வழங்குதல், விபத்து மற்றும் இயற்கை மரணங்களுக்கான நிவாரண நிதியுதவி போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாரியத்தில் தற்போது 1,74,230 தொழிலாளர்கள் உறுப் பினர்களாக உள்ளனர்.

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற பெண் ஓட்டுநர்கள் சொந்தமாக ஆட்டோ ரிக்சா வாகனம் வாங்குவதை ஊக்குவிக்கவும், அவர்களுக்கான சுயதொழில் வாய்ப்பினை உருவாக்கிடவும், அவர்களின் வருமானம் ஈட்டும் திறன் மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டும், 500 பெண் ஓட்டுநர்களுக்கு புதியதாக ஆட்டோ ரிக்சா வாகனம் வாங்கும் செலவினத்தில் தலா 1 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தின் கீழ் மானியத்திற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட 141 பயனாளி களில் பத்து பயனாளிகளுக்கு இத்திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட புதிய ஆட்டோ ரிக்சாக்களுக்கான பதிவு சான்று மற்றும் அனுமதி ஆவணங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், முகமது நசிமுத்தின், முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த் ஆகியோர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் வடக்கு மாவட்டம், திருப்பூர் வடக்கு மாநகர கழகத்தின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு “சிறப்பு பட்டிமன்றம்” திருப்பூர் கொங்கு மெயின் ரோடு, எம்.எஸ்.நகரில் திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில், வடக்கு மாநகர செயலாளர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், தெற்கு மாநகர செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு அரசு கொறடா கோவி.செழியன் நடுவராகவும், கழக கொள்கை பரப்பு இணைச் செயலாளர் நெல்லிக்குப்பம் புகழேந்தி, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, தலைமைக் கழக பேச்சாளர்கள் சைதை சாதிக், தூத்துக்குடி சரத்பாலா ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.



மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் கிழக்கு ஒன்றியம் அரிவலூர், செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியம் பாலூர், செம்பனார்கோயில் மத்திய ஒன்றியம் ஆகிய பகுதிகளில் இருந்து அ.தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளில் இருந்து 50 குடும்பத்தினர் அக் கட்சியில் இருந்து விலகி மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பிருமான நிவேதா எம்.முருகன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மங்கை எம்.சங்கர், எம்.அப்துல்மாலிக், அமுர்த.விஜயகுமார் மற்றும் ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள் உள்ளனர்.